***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.98/2017 – P.W. 6 (LW9)***

| | |
|---|---|
| *Name* | குமார் |
| *Father/Husband's Name* | பசுபதி |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *45* |

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 29.09.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். திருப்பூரில் டிரைவராக வேலை செய்து வருகிறேன்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் மேற்படி ஆவணத்தில் நடராஜன் என்பவரும் கையொப்பம் செய்திருந்தார். அவர் தற்போது உயிருடன் இல்லை. மேற்படி கையொப்பத்தினை நான் கடந்த 03.09.2015 ம் தேதி காலை 10.00 மணியளவில் மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் செய்து கொடுத்தேன். மன்னார்குடி பெரிய கம்மாளத்தெருவில் உள்ள மீனா ஜூவல்லரியில் நகை திருட்டு போனது சம்பந்தமான திருட்டு வழக்கில் நான் சிசிடிவி புட்டேஜில் நான் பார்த்த பெண்மணி காவல் நிலையத்தில் இருந்தார். அவரை போலீசார் விசாரணை செய்ததில் அவர் திருடிதை ஒப்புக்கொண்டார். மேலும், திருடிய நகைகளை வக்கீல் வசிகரன் என்பவரிடம் கொடுத்து வைத்திருப்பதாக கூறினார். அவர் கூறியதை போலீசார் கணினி மூலமாக பதிவு செய்து கொண்டனர். அதில் நானும், நடராஜன் என்பவரும் படித்து பார்த்து கையெழுத்து செய்தோம். 2 1/2 மணி நேரத்திற்கு மேல்

எங்களை காவல் நிலையத்திலே காத்திருக்க சொன்னார்கள். பிறகு திருட்டு போன நகைகளான 8 கிராம் செயின் எண்ணிக்கை -4, 16 கிராம் செயின் எண்ணிக்கை-4, 4 கிராம் செயின் எண்ணிக்கை -1, 12 கிராம் கைசெயின் எண்ணிக்கை-2, ஆக மொத்தம் 124 கிராம். 15 1/2 பவுன் ஆகிய நகைகளை போலீசார் புகார்தாரரிடம் கொடுத்தார்கள். மேலும், கைப்பற்றுதல் மகசர்களிலும் என்னிடமும், நடராஜனிடமும் கையொப்பம் பெற்றுக்கொண்டனர். (**மேற்படி கையொப்பங்கள் அசா.ஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் எட்டாம் வகுப்பு படித்துள்ளேன். இன்று காலை கூட என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்த அசா.1 சிவக்குமார் எனக்கு பழக்கப்பட்டவர் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன நகைகள் தான் கைப்பற்றப்பட்டதாக சொல்லக்கூடிய நகைகள் தான் அது என்றும், நான் கையொப்பம் செய்து கொடுத்த ஆவணங்களில் அவ்வாறு தான் இருந்தது என்றால் சரிதான். மேற்படி விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி பற்றிய விபரமும், கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் பற்றியும் போலீசார் சொன்னதின் அடிப்படையில் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் இருந்ததாக சொல்லப்படுவது அதிகபட்சமாக 3 மணிநேரம் என்றால் சரிதான். வக்கீல் வசிகரன் என்பவரை பற்றியும், நகைகள் எந்த வகையில் வந்தது பற்றியும் எனக்கு நேரிட்டு தெரியாது என்றால் சரிதான். அசா.1 க்கு வேண்டியப்பட்டவர் என்பதால் நான் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன விவரமான திருட்டு போன நகைகளான 8 கிராம் செயின் எண்ணிக்கை -4, 16 கிராம் செயின் எண்ணிக்கை-4, 4 கிராம் செயின் எண்ணிக்கை -1, 12 கிராம் கைசெயின் எண்ணிக்கை-2, ஆக மொத்தம் 124 கிராம். 15 1/2 பவுன் ஆகிய நகைகளை போலீசார் புகார்தாரரிடம் கொடுத்தார்கள் என்ற சொன்ன விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சொன்னேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன வகையில் ஆவணங்களில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், எந்த பொருட்களும் என் முன்னிலையில் கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

நானும், நடராஜனும் மன்னார்குடி நகர காவல் நிலையத்திற்கு சென்றிருந்தபோது போலீசார் தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி**

தற்போது என்ன கேள்விகேட்கப்பட்டது என்று சாட்சியிடம் நீதிமன்றம் கேட்டபோது என்ன கேள்வி என்று புரியவில்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞரை பார்த்து கேட்கிறார். கேள்வியை சாட்சியை படிக்க சொல்லி அதற்கான விளக்கம் சொல்லப்பட்டு கேட்கப்பட்டபோது சாட்சி எங்கள் முன்னிலையில் தான் தயார் செய்ததாக கூறுகிறார்.

***<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரரணை</u>***

போலீசார் என்பது அவர்களது பதவி உள்ளிட்ட விபரங்கள் எனக்கு தெரியும். அவ்வாறு இருக்கையில் இந்த ஆவணங்களை யார் தயார் செய்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் ஆவணங்களில் கையொப்பம் செய்து கொடுத்த பிறகு போலீசார் எந்த தருணத்திலும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I.
Mannargudi.